ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
முன்னிலை.திரு.ர.பாலமுரளி, எம்.ஏ, பி.எட்.,

18 18

ந.க.எண்.8296/இ1/2019 நாள்.06.01.2020

| | |
|---|---|
| பொருள் | கருணை அடிப்படையில் பணி நியமனம் – 2018–19 ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு இளநிலை உதவியாளர்கள் பணியிடங்கள்– கருணை அடிப்படை நியமனம் மூலம் நிரப்புதல் பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் – திரு. எஸ்.ஆர்.ஆறுமுகம் – என்பாரின் வாரிசுதாரர் திரு. A.ஜீவானந்தம் என்பாருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்குதல் – சார்பு |
| பார்வை | 1. அரசாணை (நிலை) எண்.225/தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள். 15.02.1972<br>2. அரசாணை(நிலை) எண்.560/தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள்.03.08.1977<br>3. அரசாணை(நிலை) எண்.101/பள்ளிக்கல்வித் (வரவுசெலவு) துறை நாள்.18.05.2018<br>4. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.68153/ஜே4/2018 நாள்.30.12.2019 |

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் இயக்குநரால் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படியும் வட்டாரட்சியரால் வழங்கப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் ஈரோடு மாவட்டம் , பண்ணாரி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளித் தலைமையாசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 30.03.1995 அன்று காலமான அரசு ஊழியர் திரு.எஸ்.ஆர்.ஆறுமுகம் என்பவரின் வாரிசுதாரர் திரு.A.ஜீவானந்தம் என்பவருக்கு கருணை அடிப்படையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கட்படுகிறது.

| பெயர் மற்றும் இல்ல முகவரி | நியமனம் அளிக்கப்படும் அலுவலகம் |
|---|---|
| திரு.A.ஜீவானந்தம்<br>எண்.99,<br>தண்டுமாரியம்மன் தெரு, வடக்குப்பேட்டை,<br>சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் | வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>தாளவாடி,<br>சத்தியமங்கலம் கல்வி மாவட்டம்,<br>ஈரோடு மாவட்டம் |

நியமனம் பெற்றுள்ள நபர் இந்நியமன ஆணை கிடைக்கப் பெற்ற ஒர வார காலத்திற்குள் பணியில் சேர வேண்டும். மேற்படி தேர்வாளருக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017 அரசாணை (நிலை) எண்.103/நிதி (ஊதியக்குழு ) துறை நாள்.11.11.2017ன் படி Level 8, 19500–62000 என்ற ஊதிய ஏற்றமுறையில் ஆரம்பநிலை ஊதியம் மற்றும் இதரப்படிகள் பெற தகுதியுடையவராவார்.

உரிய காலத்திற்குள் பணியில் சேர தவறினாலோ அல்லது விண்ணப்பதாரரால் தரப்பட்டுள்ள விவரங்கள் தவறு என அறிய வந்தாலோ இந்நியமனம் இரத்து செய்யப்பட்டததாகக் கருதப்படும். பணியில் சேரும் நாளன்று உதவி மருத்துவ அலுவலரிடமிருந்து உடல் நலத் தகுதிச் சான்று பெற்று பணியில் சேர வேண்டும். பணியில் சேர்ந்த அறிக்கையினை பணியில் சேர்ந்த அன்றே இவ்வலுவலகத்திற்கு அனுப்பக் கோரப்படுகிறது.

அன்னார் பங்குத் தொகை ஓய்வூதியத் திட்டத்தில் (Contributory Pension Scheme) மட்டும் சேரத் தகுதியுடையவர் ஆவார்.

நிபந்தனைகள்

1. பள்ளி இறுதித் தேர்வில் தமிழை மொழிப்பாடமாகவோ அல்லது கற்பிப்பு மொழியாகவோ பயிலாதவராகவோ இருப்பின் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
2. நியமனம் பெற்றுள்ள நபர் முன்னிலைப்படுத்திய கல்வி சான்றுகள் மற்றும் இதர ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றோ, மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னர் கண்டறியப்பட்டால் இந்நியமனம் எவ்வித முன்னறிவிப்பு இன்றி ரத்து செய்யப்படும்.
3. தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.
4. அரசுக் கடிதம் எண்.2941/தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு1) த் துறை/ நாள்.01.03.1994–ன் படி ஒரு ஆண்டு காலத்திற்குள் தனியருக்கு பணிவரன்முறை செய்யக்கோரும் கருத்துருவை பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்
ஈரோடு

பெறுநர்

திரு. A.ஜீவானந்தம்
எண்.99,தண்டுமாரியம்மன் தெரு,
வடக்குப்பேட்டை, சத்தியமங்கலம்,
ஈரோடு மாவட்டம்

நகல்
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் ( பணியாளர் தொகுதி) சென்னை – 6 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

2.வட்டாரக் கல்வி அலுவலர், தாளவாடி

3. மாவட்டக் கல்வி அலுவலர், சத்தியமங்கலம்

4. சார்ந்த கோப்புக்கு